மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 15—7—1980 அன்று 168 உர மூட்டைகளை திரு. லட்சுமி நாராயண செட்டியார் என்பவர் அனுமதிக்காத இடத்தில் வைத்திருந்ததைக் கைப்பற்றினார்கள். ஆனால், உரக் கலப்படம் செய்ததை நிரூபிக்க முடியவில்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்படம் என்பது மிகப் பெரிய சமூக விரோதக் குற்றமாகும். சட்டத்தைப் பயன்படுத்தி, இந்த சமூகத்தைக் கேவலப்படுத்துகின்றவர்கள் மீது மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கொடுக்க அரசு முயற்சிக்குமா ? அல்லது குறைந்த பட்சம் உரிமங்களைக் கொடுக்காமல் அல்லது மானியம், உதவித் தொகை போன்றவைகளைக் கொடுக்காமலாவது இருக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லை.

பிளவக்கல் அணைப் பகுதியில் விதைப் பண்ணை.

*வினா எண். 310.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதியில் பிளவக்கல் அணைக் கட்டுப் பகுதியில் உள்ள 600 ஏக்கர் புல்வெளிக் காட்டில் அரசு விதைப் பண்ணை துவக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையில், இல்லை என்று சொல்லி விட்டார்கள். அங்கே மண்வளம் அதிகமாக இருக்கிறது. மற்றும், பக்கத்தில் பிளவுக்கால் திட்டம் இருப்பதால், தண்ணீர் வசதியும் இருக்கிறது. கிணறுகள் வெட்டினால், தண்ணீர் வரும். அப்படியிருக்க செழிப்பான மேற்கு மலையடிவாரமாகவும் இருப்பதால், அதிகாரிகள் ஆய்வு நடத்தி இல்லையென்று சொல்லி விட்டார்களா? உண்மையிலேயே ஆய்வு நடத்தினார்களா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதைப் பற்றி முழுமையான ஆய்வு செய்யப்பட்டது. நிலங்கள் முழுவதும் வனத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் ஆகும். அவற்றில் சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் ஈக்குலிப்ட்ஸ் மரங்கள்

நடவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பகுதியில் முட்புதர்களும் மேடுபள்ளங்களும் உள்ளன. நிலம் சமன் செய்து சீர்திருத்தம் செய்யலாம் எனக் கருதினால். மேல் மண் நீங்கிய பிறகு போதுமான மண் கிடைக்காது. விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் வசதியுமில்லை. மணல் பாங்கான நிலமாக இருப்பதால் லாபகரமாகச் சாகுபடி செய்ய இயலாது. மேலும், இப்பகுதி வத்திராயிருப்பிலிருந்து சுமார் 10 மைல் தொலைவிலுள்ள காடாக இருப்பதால், விதைகள், உரம் மற்றும் விவசாயக் கருவிகள் முதலியவைகளைக் கொண்டு செல்வதற்குப் போதிய சாலை வசதியில்லை. பணிபுரியும் அலுவலர்களுக்குக் குடியிருப்பு வசதி இல்லை. 10 மைல் தொலைவிலிருந்து அலுவலர்கள் சென்று வருவது என்றால் பொருள்களுக்குப் பாதுகாப்பு கிடைக்காது. மேலும், கூலியாட்கள் கிடைப்பது மிகவும் அரிது. 10 மைல் சென்று கூலியாட்கள் வேலை செய்தால் வேலைத் திறன் மிகவும் பாதிக்கும். எனவே, இப்பகுதியில் பண்ணை அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் போன்ற பகுதிகளில் விதைப் பண்ணைகள் வைப்பதற்கு 40 ஏக்கர் கொடிக்கால் பயிரிடுவதற்கு வசதி செய்யப்பட்டும், அங்கே பயிரிடப்படாமல் இருக்கின்றது. ஆகவே, இதை மேலும் நல்லமுறையில் பரிசீலித்து, அமைச்சர் அவர்களே நேரடியாக வந்து, இதைப்பற்றி பரிசீலனை செய்து, அதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர்களே நேரிடையாக வர முடியாது; அடுத்த கேள்வி.

அம்பாசமுத்திரம் தொகுதி அப்பர் டாமிலிருந்து கேரளாவிற்கு மலைச் சாலை.

*வினா எண். 311— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி மூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள அப்பர் டாமிலிருந்து கேரளாவிற்கு மலைச்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்யும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.